‘உனக்கு நீயே உண்மையாய் இரு’

# யா/காரைநகர் இந்துக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் – கனடா

## செயற்பாட்டு அறிக்கை – 2018 (ஜனவரி 2018 – டிசம்பர் 2018)

யா/காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் 2018ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு அறிக்கையினை சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். எமது சங்கமானது பாடசாலையின் மேம்பாட்டுக்கு உதவுதல் என்கின்ற தனது உயரிய இலட்சியப் பயணத்தில் ஐந்து ஆண்டுகளை நிறைவுசெய்து ஆறாவது ஆண்டில் தடம் பதித்துக்கொண்டது. இவ்வாண்டில் சங்கத்தின் 5வது ஆண்டு நிறைவு விழா பழைய மாணவர்களின் பேராதரவுடன் எழுச்சி மிக்கதாகக் கொண்டாடப்பட்டிருந்தது. அரச உதவிகள் கிடைக்கப்பெறாத நடைமுறைச் செலவீனங்களைப் பெற்றுக்கொள்வதில் பாடசாலைச் சமூகம் எதிர்கொள்கின்ற சவால்களுக்கு நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் நிரந்தரவைப்புத் திட்டம் ஒன்றினை உருவாக்கி கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டு இத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் இவ்வாண்டிலேயே முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த ஆண்டில் அமையப்பெற்றுள்ள நிர்வாக சபையில் உள்ள 12 உறுப்பினர்களில் ஐந்து பெண் உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 2018ஆம் ஆண்டு கல்லூரியின் நடைமுறைச் செலவீனங்களிற்கும் மாணவர்களின் கற்றல் மற்றும் ஊக்குவிப்புச் செயற்பாடுகளிற்கும் ஆக மொத்தம் (ரூபா5,36,929.00) ஐந்து இலட்சத்து முப்பத்தாறாயிரத்து தொழாயிரத்து இருபத்தொன்பது ரூபா தாய்ச் சங்கத்தின் ஊடாக உதவப்பட்டிருந்தது. இதேவேளை எமது உதவியுடன் 2017ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்த காணிக்கொள்வனவால் தாய்ச் சங்கத்திற்கு கொடுக்குமதியாகவிருந்த இரண்டு இலட்சத்து இருபத்தேழாயிரத்து ஐந்நூற்று முப்பத்து நான்கு ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூபா2,27,534.64) இவ்வாண்டில் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறாக எமது சங்கத்திற்கு பலவகையிலும் சிறப்புப் பொருந்திய ஆண்டாக 2018ஆம் ஆண்டு அமைந்துள்ளமை மகிழ்ச்சியளிப்பதாகவுள்ளது.

### சங்கத்தின் உதவியுடன் நிறைவுசெய்யப்பட்ட பணிகளின் விபரம்:

**ஆளணிப் பற்றாக்குறையினை நீக்கி வைப்பதற்கான தற்காலிக உதவி:**
தற்காலிகமாக பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள அலுவலக உதவியாளாளருக்கான வேதனமாக 80000.00ரூபா உதவப்பட்டது.

**நடைமுறைச் செலவீனங்களுக்கான உதவி:**
மின் கட்டணம், இணைய (Wi Fi) மற்றும் தொலைபேசிக் கட்டணம், விருந்தினர்கள் உபசரணை, குடிநீர்க்கட்டணம், காகிதாதிகள் என்பவற்றிற்கான உதவியாக 160428.00ரூபா உதவப்பட்டது.

**ஆசிரியர் தினக் கொண்டாட்டத்திற்கான உதவி**
5வது ஆண்டாகவும் ஆசிரியர் தினக் கொண்டாட்டத்திற்கு 40000.00ரூபா உதவப்பட்டிருந்தது. இக்கொண்டாட்டத்தின்போது ஆசிரியர்களிற்கு நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் மதிய போசன விருந்தும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டிருந்தனர்.

**நினைவுப் பரிசில்கள் வழங்கியமைக்கான உதவி**
மருத்துவக்கலாநிதி வி. விஜயரத்தினம் நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையில் நடைபெற்ற கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவின்போது வழமைபோல தமது அன்பிற்குரியவர்களின் நினைவாக நினைவுப் பரிசில்களை வழங்கி உதவியோர் விபரம்.

**அமரர் சின்னத்தம்பி தம்பிராசா நினைவுப் பரிசில்:** க.பொ.த. சாதாரணம் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற இருவருக்கு தலா 3000.00ரூபா வீதம் முன்னாள் உப அதிபர் அமரர் சின்னத்தம்பி தம்பிராசா நினைவுப் பரிசில் வழங்கப்பட்டது.

**அமரர் வே. நடராசா நினைவுப் பரிசில்:** கணித பாடத்தில் சிறப்புச் சித்திபெற்ற ஒருவருக்கு 3000.00ரூபா முன்னாள் கணிதபாட ஆசிரியர் அமரர் வே. நடராசா நினைவுப் பரிசில் வழங்கப்பட்டது.

**அமரர் பொன்னம்பலவாணர் நினைவுப் பரிசில்:** கணித பாடத்தில் சிறப்புச் சித்திபெற்ற மற்றொரு மாணவருக்கு 3000.00ரூபா முன்னாள் கணிதபாட ஆசிரியர் அமரர் பொன்னம்பலவாணர் நினைவுப் பரிசில் வழங்கப்பட்டது.
மேற்குறித்த மூன்று நினைவுப் பரிசில்களுக்கான உதவியாக 12000.00ரூபா அமரர் சின்னதம்பி தம்பிராசா அவர்களின் துணைவியார் திருமதி மனோன்மணி தம்பிராசா அவர்களினால் வழங்கப்பட்டிருந்தது.

காரைநகர் முதலிகேணியடியைச் சேர்ந்த **அமரர் சுப்பிரமணியம் சரஸ்வதி நினைவுப் பரிசில்** வழங்க அன்னாரது புதல்வன் திரு. சச்சிதானந்தன் மருமகள் திருமதி சுந்தரேஸ்வரி சச்சிதானந்தன் ஆகியோரினால் 5வது ஆண்டாக 20000.00 ரூபா உதவப்பட்டது. க.பொ.த.(சாதாரணம்) பரீட்சையில் சங்கீத பாடத்தில் சிறப்புச் சித்தி பெற்ற நான்கு மாணவர்களிற்கு தலா 5000.00ரூபா வீதம் இவ்வுதவித் தொகை வழங்கப்பட்டிருந்தது.

**அமரர் நாகமுத்து கனகசுந்தரம் நினைவுப் பரிசில்** வழங்க அன்னாரது புதல்வன் கனக சிவகுமாரன் அவர்களினால் நான்காவது ஆண்டாக 5000.00 ரூபா உதவப்பட்டது. கல்லூரியின் சிறந்த மாணவனுக்கு இவ்வுதவித்தொகை வழங்கப்பட்டிருந்தது.

**அமரர் அப்பாக்குட்டி சுந்தரம்பிள்ளை நினைவுப் பரிசில்** வழங்க அன்னாரது பெறாமகன் திரு. மாணிக்கம் கனகசபாபதி அவர்களினால் 10000.00 ரூபா நான்காவது ஆண்டாக உதவப்பட்டது. இத்தொகை கல்லூரியின் சிறந்த விளையாட்டு வீரர் ஒருவருக்கும் சிறந்த வீராங்கனை ஒருவருக்கும் 5000.00 ரூபா வீதம் வழங்கப்பட்டிருந்தது.

### நடராசா ஞாபகார்த்த மண்டபத்திற்கு வர்ணம் பூசுவதற்கான உதவி

பாடசாலையின் பயன்பாட்டில் மட்டுமல்லாது காரைநகர் மக்களினது பயன்பாட்டிலும் இருந்து வருகின்ற முக்கியமான மண்டபமாகிய நடராசா ஞாபகார்த்த மண்டபத்தின் உட்புறமும் வெளிப்புறமும் வர்ணம் பூசப்பட்டு அழகுபடுத்தியமைக்கான உதவியாக 125000.00 ரூபா வழங்கப்பட்டது.

### விசேட வகுப்புக்களில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு காலை உணவு வழங்கியமைக்கான உதவி

2018, டிசம்பரில் பரீட்சைக்கு தோற்றியிருந்த க.பொ.த.(சாதாரணம்) தர வகுப்பு மாணவர்களுக்கு பாடசாலை தொடங்குவதற்கு முன்னதாக காலை நேரத்தில் விசேட வகுப்புக்கள் நடாத்தப்பட்டிருந்தன. இதன்போது காலை உணவு வழங்குவதற்கு 15000.00ரூபா உதவப்பட்டது.

### க.பொ.த. பரீட்சைகளில் சிறப்புச் சித்தி பெற்றவர்களிற்கு ஊக்கிவிப்புப் பரிசில் வழங்கியமைக்கான உதவி

க.பொ.த.(சாதாரணம்) பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற பன்னிரண்டு மாணவர்களிற்கும் க.பொ.த.(உயர்தரம்) பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற பன்னிரண்டு மாணவர்களுக்கும் பாராட்டு விழா நடாத்தி ரொக்கப் பரிசில்கள் வழங்கும்பொருட்டு 45500.00ரூபா நான்காவது ஆண்டாக வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### வாழ்வாதார வசதி குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த மாணவியின் கற்றல் செயற்பாட்டிற்கான உதவி

க.பொ.த (உயர்தரம்) வகுப்பின் வர்த்தகப் பிரிவில் கல்வி பயின்று வருபவரும் தந்தையை இழந்த நிலையில் வாழ்வாதார வசதி குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த திறமை மிக்க மாணவி ஒருவரின் கற்றல் செயற்பாட்டிற்காக எமது சங்க உறுப்பினர் திரு.மாணிக்கம் கனகசபாபதி அவர்களின் நிதிப் பங்களிப்புடன் பல்கலைக்கழகத் தெரிவுக்கான இறுதிப் பரீட்சை வரைக்குமான இரண்டு ஆண்டுகளுக்கு தவணை அடிப்படையில் உதவி வழங்கும் திட்டம் சென்ற ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. நொவம்பர் 2017 தொடக்கம் நொவம்பர் 2018 வரைக்குமான ஓராண்டுகுரிய உதவித்தொகை 24000.00ரூபா வழங்கப்பட்டது.

### சங்கத்தின் 5வது ஆண்டு விழா

எமது சங்கத்தின் 5வது ஆண்டு விழா மிகவும் எழுச்சிகரமாக மே மாதம் 20ஆம் திகதி கனடா ஐயப்பன் ஆலயத்தில் கொண்டாடப்பட்டிருந்தது. பாடசாலை அன்னையை பெருமைப்படுத்திய இவ்விழாவின் பிரதம விருந்தினராக கல்லூரியின் பெருமைக்குரிய பழைய மாணவனான மருத்துவகலாநிதி இராமலிங்கம் செல்வராசா அவர்களும் அவரது துணைவியார்

மருத்துவகலாநிதி சறோ செல்வராசா அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். 'சுப்பர் சிங்கர்' R.P. ஸ்ரவண் அவர்களின் இன்னிசைக் கச்சேரி சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றிருந்ததுடன் சங்கத்தின் வரலாற்று ஆவணப் பதிவாக சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டிருந்தது.

**அமரத்துவம் அடைந்தோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தமை**

சங்கத்துடனும் பாடசாலையுடனும் தொடர்பு மிக்கவர்கள் அமரத்துவம் அடையும்போது அது குறித்த அறிவித்தலும் சங்கத்தின் சார்பிலான அஞ்சலியும் எமது இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு இவ்விதம் பதின்மூன்று பேருடைய அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது.

**சாதனையாளர்களையும் நேச அமைப்புக்களையும் வாழ்த்தி இணையத்தளத்தில் பதிவிட்டிருந்தமை.**

சாதனைகள் ஏற்படுத்தியும் சேவைகள் புரிந்தும் பாடசாலைக்கு புகழ் சேர்த்து வருகின்ற கல்லூரியுடன் தொடர்புள்ளோரையும் நேச அமைப்புக்களையும் சங்கம் பாராட்டி வாழ்த்தி, இணையத்தளத்தில் பதிவிட்டிருந்தது.

**கடற்படையின் கட்டுப்பாட்டிலுள்ள காணியை விடுவிக்க முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை.**

எமது சங்கத்தின் உதவியுடன் பாடசாலையினால் கொள்முதல்செய்யப்பட்டு கடற்படையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ள காணியை விடுவிப்பதற்கு எமது சங்கத்தின் பிரதிநிதிகள் தாய்ச் சங்கத்துடன் இணைந்து பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் (தற்போதய கல்வி இராஜாங்க அமைச்சர்) அவர்களையும் யாழ் அரசாங்க அதிபரையும் சந்தித்து கோரிக்கையை முன்வைத்து பேசியிருந்தனர். இதைத் தொடர்ந்து திருமதி விஜயகலா அவர்கள் காணியை விடுவிப்பதற்கு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

**எமது சங்கத்தின் நெஞ்சார்ந்த நன்றிக்குரியோர்:**

நாம் உதவி கேட்டு அணுகியபோது மனம்கோணாது தாராள சிந்தையுடன் நன்கொடைகள் வழங்கி ஊக்குவித்த பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், அனுசரணையாளர்கள் ஆகியோருக்கும் எமது கோரிக்கையின் அடிப்படையில் கடற்படையின் கட்டுப்பாட்டிலுள்ள காணியை விடுவிக்க தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்கட்கும், இவ்வாண்டுக்கான பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றிவைக்க திரு. நாகலிங்கம் குஞ்சிதபாதம் தலைமையில் உழைத்த அனைத்து நிர்வாகிகள், சங்கத்தின் சீரிய செயற்பாட்டிற்கு ஆலோசனைகள் வழங்கி நெறிப்படுத்திய போசகர் சிவநெறிச்செல்வர் தில்லையம்பலம் விசுவலிங்கம், எமக்கு பெரும் ஊக்குவிப்பாகவும் உந்து சக்தியாகவும் பின்புலத்திலிருந்து செயலாற்றி வருகின்ற கணக்காய்வாளர் திரு. முருகேசம்பிள்ளை வேலாயுதபிள்ளை, எம்முடன் ஒருங்கிணைந்து செயற்பட்ட பிரதேசங்களின் இணைப்பாளர்களிற்கும் எமது உதவிகள் சார்ந்து மனநிறைவான ஒத்துழைப்பை வழங்கிய கல்லூரியின் அதிபரும் தாய்ச் சங்கத்தின் தலைவருமாகிய திருமதி சிவந்தினி வாகீசன் மற்றும் தாய்ச் சங்கத்தின் நிர்வாகிகள், பரிசில் தினத்தை சிறப்பாக அமைப்பதற்கு பாடசாலை நிர்வாகத்திற்கு எமது சங்கத்துடன் ஒருங்கிணைந்து ஒத்துழைத்த 'மருத்துவக்கலாநிதி வி.விஜயரத்தினம் நம்பிக்கை நிதியத்தின்' நிறுவுனர் மருத்துவக்கலாநிதி வி. விஜயரத்தினம், நினைவுப் பரிசில்களை வழங்கி வருகின்றவர்களான திருமதி மனோன்மணி தம்பிராசா, திரு. திருமதி சச்சிதானந்தம் சுந்தரேஸ்வரி தம்பதியினர், திரு. மாணிக்கம் கனகசபாபதி, திரு. கனக சிவகுமாரன் ஆகியோருக்கும் சிறந்தமுறையில் இணையத்தளத்தினை நிர்வகித்து வருகின்ற திருமதி கிருஷ்ணவேணி சோதிநாதன் ஆகிய அனைவருக்கும் செயலாளர் என்ற வகையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கனக சிவகுமாரன்.
செயலாளர்